## கணபதிபாளையம் கிராம ஊராட்சி தலைவர்/செயல்அதிகாரி அவர்களின் நடவடிக்கைகள்

### முன்னிலை :திருமதி.நாகேஸ்வரி சோமசுந்தரம்

ந.க.எண்:03 /2023-2024 நாள்:24-01-2024

பொருள்: குடியிருப்பு மனை பிரிவு - திருப்பூர் மாவட்டம் பல்லடம் வட்டாரம் கணபதிபாளையம்கிராமஊராட்சியில் க.ச.எண்:85/1A,85/1B,ல் 1.60 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைபிரிவு - வரைபட ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை: 1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர் ந.க.எண்.XGODZSYF/2023/TCP நாள்:17.10.2023

2.ஊராட்சி தீர்மானம் எண்:194 நாள்.29.12.2023

உத்தரவு:

திருப்பூர்மாவட்டம் பல்லடம் வட்டாரம் கணபதிபாளையம் கிராம ஊராட்சியில் க.ச.எண்:85/1A,85/1B,ல் 1.60ஏக்கர்பரப்பளவில்குடியிருப்பு மனைபிரிவு அமைத்துக்கொள்ள பார்வை (1)-ல் காணும் திருப்பூர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் கடிதத்தின் படி **SWP/DTCP/TIRUPPUR/LAYOUT.NO:274/2023** என எண்ணிடப்பட்ட வரைபட ஒப்புதல் அனுமதியின் படியும்பார்வை(2)-ல்காணும் இவ்வூராட்சி தீர்மானத்தின்படியும் திரு.M.அருள்பிரகாஷ், மற்றும் 4 நபர்களுக்கு கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு வரைபட அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உதவி இயக்குநர், திருப்பூர் அவர்களின் மனைப்பிரிவு வரைபட அனுமதியில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.

2.எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்கக் கூடாது.

3.மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும் ,கட்டணம் குறைவாக வசூலிக்கப் பட்டதாகஅறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரது பொறுப்பாகும்

4.மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற வேண்டும்.

5.மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைப்படின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

6.மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின்படி நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.

7.மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெறப்பட்டவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு அங்கீகரித்த தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் / எவ்வித விடுதலுமின்றி மனைப்பிரிவு நுழை வாயிலில் 6"X4" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசுரிக்கப்பட வேண்டும்.

8.EWS மனைகள் பொருளாதாரத்தால் பின்தங்கியவர்களுக்க ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோ கூடாது.

09.வரைபட அங்கீகாரம் 2019 ம் வருடத்திய தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகளுக்கு உட்பட்டதாகும்.

10.மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வப்போது அரசினாலோ ஊராட்சி மன்றத்தினாலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

11.மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி இரத்து செய்யப்படும்.

பெறுநர்:திரு.M.அருள்பிரகாஷ்,
கதவுஎண்.102 ,
ஸ்ரீசக்தி அவென்யூ ,
வஞ்சிபாளையம் பிரிவு, திருப்பூர்மாவட்டம் ,

தலைவர்/செயல்அதிகாரி
கணபதிபாளையம் கிராம ஊராட்சி,
பல்லடம்வட்டாரம்.

24/11/24

நகல்:

1.நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர்,

2.சார்பதிவாளர்,பல்லடம்.

**கணபதிபாளையம் கிராம ஊராட்சி**

**பல்லடம் வட்டாரம்**

**கூட்ட நடவடிக்கை நகல்**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 29.12.2023 ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற கணபதிபாளையம் கிராம ஊராட்சியின் சாதாரணக் கூட்டநடவடிக்கைநகல்.

**முன்னிலை:திருமதி.நாகேஸ்வரி சோமசுந்தரம்**

**தலைவர்/செயல்அதிகாரி**

| வ.எண் பொருள்எண்: 8 | தீர்மானம் எண்: 194 |
|---|---|
| திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டாரம் கணபதிபாளையம் கிராம ஊராட்சி க.ச.எண்:85/1A,85/1B,ல் 1.60ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைபிரிவு அமைத்துக் கொள்ள திரு.M.அருள்பிரகாஷ், மற்றும் 4 நபர்களுக்கு திருப்பூர்நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர்மாவட்டம், ந.க.எண்.XGODZSYF/2023/TCP நாள்:17.10.2023ன்படி **SWP/DTCP/TIRUPPUR/LAYOUT.NO:274/2023** என எண்ணிடப்பட்டு வரைபட ஒப்புதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி குடியிருப்பு மனைபிரிவு ஒப்புதல் வரைபட அனுமதியை மன்றத்தில் பரிசீலனை செய்து அங்கீகாரம் வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்டது |

/ உண்மைநகல்/

நா. சோமசுந்தரம் (கையொப்பம்)

தலைவர்/செயல்அதிகாரி,
கணபதிபாளையம் கிராம ஊராட்சி,
பல்லடம்வட்டாரம்.

24/1/24